1978 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) சேரன் போக்குவரத்துக் கழகத்தின்கீழ் நீலகிரி மற்றும் வால்பாறை மலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மாதம் ரூ. 25-க்கு மிகாமல் அவர்களது அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதம் மலைவாசப்படி 1—5—1977-ம் தேதி முதல் வழங்க அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. குளிர் தடுப்பு உடைக்கான படி தனியாக வழங்கப்படவில்லை. ஆனல் கழகச் செலவிலேயே குளிர் தடுப்பு உடைகள் ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நீலகிரி மலையில் கடுமையான குளிரில் வேலை செய்யக்கூடிய அந்த ஊழியர்களுக்குக் குளிர் தடுப்புக் கம்பளி உடை வழங்கப்படாமல் இருந்தால், அவர்களுடைய சொந்தச் சம்பளத்திலேயே அவர்கள் அதிகச் செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதை உணர்ந்து அரசு அதற்கான ஒரு அலவன்ஸ் அந்தக் குளிர் தடுப்பு உடைக்கான அலவன்ஸ் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மலையில் பணிபுரிகிற பணியாளர்களுக்குச் சேரன் போக்குவரத்துக் கழகம் தன்னுடைய சொந்தச் செலவிலேயே குளிருடைகள் வழங்கி வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சேரன் போக்குவரத்துக் கழகத்தில் வேலையிழந்த சில ஊழியர்கள் பற்றி அமைச்சரிடம் பேச்சுவார்த்தை நடந்ததா ? அப்படியானல், பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எத்தனை பேர் ? அவர்களில் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மூல வினு மலைவாசப்படி பற்றியும், குளிர் தடுப்பு உடைக்கான படி பற்றியும் ஆகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினரைத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

Krishnagiri-Madras express bus service.

*298. *Q*.—Dr. K. Samarasam: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether the express bus plying between Krishnagiri and Madras has been cancelled; and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) இல்லை. இந்த பேருந்து தர்மபுரி வரை நீடிக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியிலிருந்து சென்னைக்கு நெடுந்தூர பஸ் இருந்ததை, தர்மபுரி வரை மாற்றப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தற்சமயம் பெங்களூரில் இருந்து சென்னைக்கு தனியார் பேருந்துகள் இரவு பத்து மணிக்குமேல் 4 பேருந்து வண்டிகள் வருகிறது. அரசு வருமானத்தைப் பெருக்கவும், பொதுமக்கள் பயணத்திலே இருக்கிற தொல்லைகளை நீக்கவும், குறைந்தது கிருஷ்ணகிரியிலிருந்து சென்னைக்கு ஒரு புதிய பஸ் விட ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தர்மபுரிக்கு மாற்றப்படவில்லை. நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மற்ற யோசனைகள் பரிசீலிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : தலைவர் அவர்களே, சுற்றுலா பயணிகள் அதிகமாக வருகின்ற குற்றாலத்திற்கு, சென்னையிலே இருந்து நேரடியாக பஸ் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இது பற்றி பரிசீலனை அரசின் கவனத்தில் இருந்து வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைப் பகுதிகளில் சாலைகள்.

* 299. **வினா**—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் உள்ள கல்லேரி—வாணபுரம் சாலையை அபிவிருத்தி செய்ய அளவுகள் செய்யப்பட்டு சுமார் இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகியும் வேலை நடைபெறவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், வேலை நடைபெற எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?